# விவேகானந்த கல்லூரி

(பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசிய தர நிர்ணயக் குழுவினரால் (NAAC) ‘A’ கிரேடு மறு மதிப்பீடு செய்யப் பெற்றது (CGPA 3.59 out of 4.00)
(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்)
திருவேடகம் மேற்கு – 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு
இணையதளம்: www.vivekanandacollege.ac.in மின்னஞ்சல்: principal@vivekanandacollege.org

04543-258234, 258334
நிகரி : 04543-258358



சுவாமி வேதானந்த
செயலர்
சுவாமி அத்யாத்மானந்த
குலபதி

# குருகுலச் சுடர்

முனைவர் தி.வெங்கடேசன்
முதல்வர்

தீபம் 3 (2019-2020) சுடர் : 4 செப்டம்பர், அக்டோபர் & நவம்பர் 2019


**அன்புடையீர்,**

வணக்கம். குருகுலம் இனிதே நடைபெற்று வருகின்றது. கடந்த செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் 2019ல் நடந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

## குருகுலம் சம்பந்தமானது

* 09.09.2019, 16.09.2019, 23.09.2019, 30.09.2019 07.10.2019, 14.10.2019, 21.10.2019, 28.10.2019, 01.11.2019 மற்றும் 11.11.2019 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 8.15 மணிக்கு கல்லூரி மைதானத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது.
* 02.09.2019 அன்று கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட்டது. அன்று அதிகாலை 4.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை அகண்டநாம ஜபம் நடைபெற்றது. மாணவர்கள் தங்களது அறைகளை அலங்கரித்து சிறப்பு பஜனையுடன் வழிபாடு நடத்தினர். அவற்றை செயலர் சுவாமி, குலபதி சுவாமி, முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் அறைகளை பார்வையிட்டனர். சிறப்பாக அலங்கரித்து வழிபாடு நடத்திய அறை மாணவர்களுக்கு அன்று மாலை நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் பரிசு வழங்கப்பட்டது.
* 05.09.2019 அன்று காலை வழிபாட்டுக்கூடத்தில் நடைபெற்ற காலை வழிபாட்டைத் தொடர்ந்து விஷ்ணுகுமார் (II Bot) ஆசிரியர் தின சிறப்புரை ஆற்றினார். மாணவர்கள் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.
* 05.09.2019 அன்று கல்லூரியின் வழிபாட்டுக்கூடத்தில் நடைபெற்ற மாணவர் மேம்பாட்டு நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட தபால்துறை அலுவலர் மற்றும் திருவேடகம் தபால் அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டு “Service of Post office” என்ற தலைப்பில் இந்திய தபால் துறை வழங்கும் பல்வேறு சேவைகள் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினர்.
* 06.09.2019, 13.09.2019, 20.09.2019 மற்றும் 27.09.2019 ஆகிய வெள்ளிக்கிழமைகளில் கிராம தத்தெடுத்தல் திட்டத்தின் கீழ் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் C.வடிவேல் மற்றும் திரு.M.நாகராஜ் ஆகியோர் தலைமையிலான மாணவர் குழுவினர் முள்ளிப்பள்ளம், தென்கரை, நெடுங்குளம், தச்சம்பத்து, திருவேடகம் மற்றும் மேலக்கால் ஆகிய கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பள்ளி மாணவர்களுக்கு நீதிபோதனைக் கதைகள், பக்திப்பாடல்கள் ஆகியவைகளைக் கற்பித்தனர்.
* 07.09.2019, 14.09.2019, 21.09.2019, 28.09.2019, 05.10.2019, 12.10.2019, 19.10.2019, 02.11.2019 மற்றும் 09.11.2019 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 06.00 மணி முதல் 06.45 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் பஜனை சிறப்பாக நடைபெற்றது.
* 07.09.2019 அன்று திண்டுக்கல், சௌந்தரராஜா வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற அப்பள்ளியின் 31வது விளையாட்டு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் தி.வெங்கடேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விளையாட்டு விழாவை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.
* 11.09.2019 அன்று மாலை கல்லூரியின் வழிபாட்டுக்கூடத்தில் நடைபெற்ற பாரதியார் நினைவு தின நிகழ்ச்சியில் கல்லூரி துணை முதல்வர் பேரா.V.பார்த்தசாரதி பாரதியாரின் வாழ்க்கை நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார்.
* 11.09.2019 அன்று கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு தின 126வது ஆண்டு சிறப்பு கருத்தரங்கில் மதுரை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சுவாமி தத்பிரபானந்த சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ஜெ.தனீஸ் (I PHY) மற்றும் மு.வெற்றிவேல் (I CS) ஆகிய மாணவர்கள் முறையே ஆங்கிலம் மற்றும் தமிழில் விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவினை நிகழ்த்தினர். கல்லூரி துணைமுதல்வர் பேரா.V.பார்த்தசாரதி நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். கல்லூரி செயலர் சுவாமி வேதானந்த மற்றும் குலபதி சுவாமி அத்யாத்மானந்த ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.
* 12.09.2019 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் இந்திய தேர்தல் ஆணையத்தின் மதுரை பிரிவு சார்பாக நடைபெற்ற வாக்காளர் சரிபார்த்தல் நிகழ்ச்சியில் மதுரை மண்டல தேர்தல் அலுவலர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாக்காளர் பெயர் சேர்ப்பு மற்றும் திருத்தம் குறித்து விளக்க உரையாற்றினார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் தி.வெங்கடேசன் தலைமையுரையாற்றினார்.
* 12.09.2019 அன்று மதுரை, மடீட்சியா அரங்கில் நடைபெற்ற புதிய கல்விக்கொள்கை வரைவு-2019 என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர்.M.அருள்மாறன் மற்றும் மாணவர்கள் 20பேர் கலந்து கொண்டனர்.
* 14.09.2019 அன்று கல்லூரி வழிபாட்டுக் கூடத்தில் நடைபெற்ற மாணவர் மேம்பாட்டு நிகழ்ச்சியில் புதுடெல்லி, உச்சநீதிமன்ற வழக்கறிஞர் திரு.அஸ்வினி உபாத்யாய் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 370வது பரிவு நீக்கம் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார்.
* 14.09.2019 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற முன்னாள் மாணவர் சங்க செயற்குழு கூட்டத்தில் இவ்வாண்டிற்கான முன்னாள் மாணவர் கூட்டத்தை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் முன்னாள் மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர் மற்றும் துணைமுதல்வர் ஆகியோர் கலந்து கொண்டனர்.
* 18.09.2019 முதல் 23.09.2019 வரை வாடிப்பட்டி தாலுகாவிற்கு உட்ட கிராமங்களின் வாக்காளர் அட்டை மற்றும் குடும்ப அட்டை எண்களை இணைக்கும் பணியை கல்லூரி மாணவர்கள் Online மூலமாக 25,000 படிவங்களை பதிவேற்றம் செய்தனர். உதவிப்பேராசிரியர்கள் முனைவர் S.சந்திரசேகரன் மற்றும் திரு.R.கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.
* 28.09.2019 அன்று கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்க கூட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் முன்னாள் மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டனர். பின்னர் முன்னாள் மாணவர் சங்க அலுவலகத்தை கல்லூரி செயலர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் நடைபெற்ற முன்னாள் மாணவர் சங்க பொதுக்குழு கூட்டத்தில் முன்னாள் மாணவர் சங்கத்தின் பல்வேறு நிகழ்வுகள் குறித்து ஆலோசிக்கப்ட்டன. பிற்பகலில் முன்னாள் மாணவர்கள் தத்தமது துறைகளுக்கு சென்று தற்போதைய மாணவர்களிடையே உரையாற்றினர்.
* 29.09.2019 அன்று கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் நவராத்திரி விழா சிறப்பு பஜனை மற்றும் வழிபாட்டுடன் துவங்கியது. நவராத்திரியை முன்னிட்டு கொலுபொம்மைகள் அலங்கரித்து வைக்கப்பட்டன.
* 03.10.2019 மற்றும் 04.10.2019 ஆகிய நாட்களில் கல்லூரியின் Vivekananda Science Exhibition to the Rural Masses (VISETROM-X) பத்தாவது அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியின் துவக்க விழாவில் சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றத்தின் உறுப்பினர் செயலர் முனைவர் R.ஸ்ரீநிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துவக்கவுரையாற்றி கண்காட்சியினை துவக்கி வைத்தார். மேலும் அனைத்து துறைகளுக்கும சென்று அங்கு காட்சிப்படுத்தப்பட்ட மாணவர்களின் கண்டுபிடிப்புகளை கண்டு ரசித்தார். கண்காட்சியின் இரண்டாம் நாள் மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் மதுரை, மதுரை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.சு.சுவாமிநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியில் பங்கு கொண்டு சிறந்த பங்களிப்பு வழங்கிய முதல் மூன்று பள்ளிகள் மற்றும் பள்ளி கல்லூரி அல்லாத பிற நிறுவனங்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.

* 05.10.2019 அன்று காலை வழிபாட்டுக்கூடத்தில் சக்தி அந்தர்யோகம் நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி செயலர் சுவாமி வேதானந்த, முன்னாள் செயலர் சுவாமி பரமானந்த ஆகியோர் ஆன்மிக உரைநிகழ்த்தினர். குலபதி சுவாமி அத்யாத்மானந்த மாணவர்களின் ஆன்மிக சந்தேகங்களுக்கு விடையளித்தனர்.
* 07.10.2019 கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது. அன்று அதிகாலை 4.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை அகண்டநாம ஜெபம் நடைபெற்றது. மாணவர்கள் தங்களது அறைகளை அலங்கரித்து சிறப்பு பஜனையுடன் வழிபாடு நடத்தினர். அவற்றை செயலர் சுவாமி, குலபதி சுவாமி, முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் அறைகளை பார்வையிட்டனர். சிறப்பாக அலங்கரித்த அறை மாணவர்களுக்கு அன்று மாலை நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் பரிசு வழங்கப்பட்டது.
* 24.10.2019 சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநில மன்றத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியல் தமிழக அரசின் "Rural-Urban Connectivity Centers for Technology Dissemination – Research and Livelihood Sustainability" என்ற திட்டத்தின் கீழ் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை நமது கல்லூரியில் செயல்படுத்துவதங்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தி.வெங்கடேசன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். வேதியியல் துறைத்தலைவர் உதவிப்பேராசிரியர் திரு.B.சேர்வாரமுத்து உடன் சென்றார்.
* 14.11.2019 அன்று தமிழக அரசின் வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் R.B.உதயகுமார் நமது கல்லூரியின் நுழைவாயில் அருகில் மரக்கன்று வைத்தார். மேலும் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ் அகராதி வழங்கினார்.

## தமிழ்த் துறை

* 03.09.2019 அன்று மதுரை T.V.S மேல்நிலைப்பள்ளியில் ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியார் தினம் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் கு.இராமர் தலைமை ஏற்று சிறப்புரை நிகழ்த்தினர்.
* 14.10.2019 அன்று மதுரை, எலியார்பத்தி, சுப்புலட்சுமி லட்சுமிபதி அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையில் நடைபெற்ற பாடத்திட்டக்குழு கூட்டத்தில் முனைவர் G.இராமர் கலந்து கொண்டு பாடத்திட்ட மேம்பாடு குறித்த ஆலோசனைகை வழங்கினார்.

## ஆங்கிலத் துறை

* 05.09.2019 அன்று உதவிப்பேராசிரியர் முனைவர் P.சரவணக்குமார் சாத்தூர், SRMN கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தேர்வுக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் நடைபெற்ற OBE (Outcome Based Education) அடிப்படையிலான கேள்வித்தாள் வடிவமைப்பில் கலந்துகொண்டார்.
* 09.09.2019 அன்று ஆங்கிலத்துறை சார்பாக கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையின் முதன்மையர் மற்றும் ஆங்கிலத்துறை பேராசிரியர் முனைவர் K.முத்துராமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'English Language Acquisition through Literature for Effective Communication Skill' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவர்கள் மற்றும் ஆங்கில மொழிப்பாட மாணவர்கள் கலந்துகொண்டனர்.
* 20.09.2019 அன்று விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் ஆங்கிலத்துறையில் நடைபெற்ற "Short Stories of the World in English" என்ற தலைப்பிலான ஒருநாள் தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் S.ஜோதிபாசு, திரு.L.கண்ணன் மற்றும் மூன்றாமாண்டு ஆங்கில இலக்கில மாணவர்கள் கலந்துகொண்டனர். உதவிப்பேராசிரியர் முனைவர் P.சரவணக்குமார், 'Isolation and Identity in Khushwant Singh's 'Karma' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

## பொருளியல் துறை

* 16.09.2019 அன்று மதுரை, தியாகராசர் கல்லூரியின் பொருளியல் துறையில் "Current Scenario of Indian Economy:Challenges and Response" என்ற தலைப்பில் நடைபெற்ற மண்டல அளவிலான ஒருநாள் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் M.அருள்மாறன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும் துறைமாணவர்கள் 7பேர் தங்களது ஆய்வுக்கட்டுரைகளை சமப்பித்தனர்.
* 17.09.2019 அன்று பொருளியல் துறையின் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற "OIKOS MEET" மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில், கட்டுரை வாசித்தல், நான் யார்? புதிர் நிகழ்ச்சி, வினாடி வினா, தமிழ் மற்றும் ஆங்கில வாரச்செய்திகள் ஆகிய நிகழ்வுகளை மாணவர்கள் நிகழ்த்தினர். வேதியியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் A.கண்ணன் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளின் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்திப் பேசினார்.
* 21.09.2019 அன்று திருச்சி, தூய வளனார் கல்லூரியின் பொருளியல் துறை சார்பாக நடைபெற்ற "Research Methodology" என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறையில் உதவிப்பேராசிரியர் திரு.N.தினகரன் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.
* 25.09.2019 அன்று மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் பொருளியல் துறை சார்பாக "Agriculture The way of Life" என்ற தலைப்பில் நடைபெற்ற "OIKONOMY-2019" கல்லூரிகளுக்கிடையோன பல்திறன் போட்டிகளில் உதவிப்பேராசிரியர் திரு.N.தினகரன் உடன் சென்ற மாணவர் அணியினர் இரண்டு போட்டிகளில் இரண்டாம் பரிசு பெற்றனர்.
* 13.09.2019 அன்று சிவகாசி, SFR மகளிர் கல்லூரியின் பொருளியல் துறையில் நடைபெற்ற பாடத்திட்டம் குழுக்கூட்டத்தில உதவிப்பேராசிரியர் முனைவர் G.அசோக்குமார் துறை வல்லுனராகக் கலந்து கொண்டு பாடத்திட்ட மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் வழங்கினார்.
* 03.10.2019 முதல் இரண்டு மாதங்கள் கேரளா மாநிலம் கொச்சி, கொச்சி அறியியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் உதவிப்பேராசிரியர் முனைவர் A.சதீஷ்பாபு ஆய்வு மேற்கொண்டு வருகிறார். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மையத்தின் இளம் அறிவியலாளர் பயிற்சி திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வாய்ப்பினைப் பெற்றார்.
* 03.10.2019 முதல் 05.10.2019 வரையிலான நாட்களில் பெங்களுர், ஜெயின் நிகர்நிலைப்பல்கலைக்கழத்தின் CMS வணிக மேலாண்மைக் கல்லூரியில் நடைபெற்ற "Application of Econometrics in Research" என்ற தலைப்பிலான ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் திரு.N.தினகரன் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.
* 01.11.2019 முதல் 14.11.2019 ஆகிய நாட்களில் கோயமுத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி மையம் சார்பாக "Standardised Research Methods for Data Analysis" என்ற தலைப்பில் நடைபெற்ற சமூக அறிவியல் பேராசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியா திரு.N.தினகரன் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.

## வரலாற்றுத் துறை

* 17.09.2019 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை சார்பாக பேராசிரியர் K.இராஜன் அறக்கட்டளை மற்றும் K.V,.சுப்பிரமணிய ஐயர் அறக்கட்டளை விரிவுரை நிகழ்ச்சியில் ஐந்து மாணவர்கள் மற்றும் உதவிப்பேராசிரியர் V.முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
* 17.09.2019 மதுரை, மதுரைக்கல்லூரியில் நடைபெற்ற தற்கொலை தடுப்பு பயிற்சி பட்டறையில் உதவிப்பேராசிரியர் திரு M.P.குமரேசன் கலந்து கொண்டார்.
* 18.09.2019 அன்று வரலாற்றுத்துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் "Historical Analysis of Sri Richard Attenborogh's Movie Gandhi" என்ற தலைப்பில் கல்லூரியின் விலங்கியல் துறை முன்னாள் பேராசிரியர் முனைவர் N.நாட்டுத்துரை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மகாத்மா காந்தியின் வாழ்க்கை திரைப்படம் குறித்து விரிவுரையாற்றினார்.

* 18.09.2019 அன்று விருதுநகர், V.V.வன்னியபெருமாள் மகளிர் கல்லூரியின் வரலாற்றுத்துறை சார்பாக தேசிய அளவிலான கருத்தரங்கு "Numismatics: Array of Coins & Rumination of Indian Culture" என்ற தலைப்பில் நடைபெற்றது. இதில் ஆறு மாணவர்கள், பேராசிரியர் முனைவர் T.காளியப்பன், உதவிப்பேராசிரியர்கள் M.P.குமரேசன் மற்றும் V.முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
* 27.09.2019 அன்று மதுரை, Fortune Pandyan ஹோட்டலில் 'Tourism and Job' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் ஒன்பது மாணவர்கள் மற்றும் உதவிப்பேராசிரியர் V.முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
* 16.10.2019 அன்று திண்டுக்கல், GTN கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கல்விக்குழு கூட்டத்தில் இணைப்பேராசிரியர் முனைவர் T.காளியப்பன் மதுரை காமராசர் பல்கலைக்கழக பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.
* 19.10.2019 அன்று ராஜபாளையம், ராஜூஸ் கல்லூரியின் வரலாற்றுத்துறையில் இந்திய வரலாற்று ஆய்வு நிறுவனத்தின் நிதி நல்கையில் நடைபெற்ற "$150^{th}$ Birth Anniversary of Gandhiji: Relevance of Gandhian Principles in Present Scenario" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் திரு.V.முருகன் கலந்து கொண்டார்.

## வணிகவியல் துறை

* 04.09.2019 அன்று திருச்சி, ஹோலி கிராஸ் கல்லூரியின் வணிகவியல் துறையின் "Consumer Behaviour towards Organic Products in Tiruchirappalli Corporation" என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வின் வாய்மொழித் தேர்வில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் புறத்தேர்வராகக் கலந்துகொண்டு தேர்வினை நடத்தினார்.
* 06.09.2019 அன்று விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் வணிகவியல் கணினிப்பயன்பாட்டுத்துறை சார்பாக நடைபெற்ற 'Practical Applications of GST and Its Impact on Indian Economy' என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறையில் உதவிப்பேராசிரியர் முனைவர் K.செல்லப்பாண்டியன் கலந்துகொண்டார்.
* 06.09.2019 அன்று திண்டுக்கல், பார்வதீஸ் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் மேம்பாட்டு நிகழ்ச்சியில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.
* 06.09.2019 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற வணிகவியல் துறையின் விரிவாக்கத்திட்டத்தின் கீழ் மதுரை, பரவை GHCL Ltd.. ஸ்ரீமீனாட்சி மில்ஸ் பெண் ஊழியர்களுக்கு வழங்கும் கணினி திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியின் சிறப்பு கருத்தரங்கில் GHCL ஆலையின் மனித வள உதவி பொதுமேலாளர் திரு.C.நாகராஜன், கூடுதல் பொது மேலாளர் திரு.R.J.ஜானகி சங்கர் மற்றும் GHCL ஆலையின் ஆற்றுநர் திருமதி.உமாராணி ஆகியோர் இவ்விரிவாக்கத்திட்ட பயனாளர்களிடையே உரையாற்றினர்.
* 07.09.2019 அன்று மதுரை, தமுக்கம் மைதானத்தில நடைபெற்ற மதுரை புத்தகக் கண்காட்சிக்கு வணிகவியல் துறையின் அனைத்து இளங்கலை, முதுகலை மாணவர்கள் மற்றும் துறை பேராசிரியர்கள் சென்று பார்வையிட்டனர்.
* 10.09.2019 அன்று மதுரை, பரவை, GHCL நூற்பாலைக்கு முதலாமாண்டு மாணவர்கள் 55பேர், உதவிப்பேராசிரியர்கள் முனைவர் K.செல்லப்பாண்டியன் மற்றும் முனைவர் S.வடிவேல் ராஜா ஆகியார் மேற்பார்வையில் தொழிற்சாலை பார்வையிடல் நிகழ்ச்சிக்காக சென்று தங்கள் சந்தேகங்களுக்கான விளக்கங்களைக் கேட்டறிந்தனர்.
* 11.09.2019 மற்றும் 12.09.2019 ஆகிய நாட்களில் கேரள மாநிலம், மூணாறு, கண்ணன் தேவன் தேயிலைத் தொழிற்சாலைக்கு தொழிற்சாலை பார்வையிடல் நிகழ்ச்சிக்கு சென்று அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் தேயிலை உற்பத்தி குறித்து கேட்டறிந்தனர். உதவிப்பேராசிரியர்கள் முனைவர் K.செல்லப்பாண்டியன், முனைவர் S.சந்திரசேகரன், முனைவர் C.வடிவேல், முனைவர்.S.வடிவேல்ராஜா, முனைவர் K.B.ராஜா மற்றும் திரு.B.மாரிமுத்து ஆகியோர் மாணர்களை வழிநடத்தி அழைத்துச் சென்று வந்தனர்.
* 13.09.2019 அன்று திண்டுக்கல், அம்பிளிக்கை, புனித ஜேக்கப் நினைவு கிறித்தவக் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "ஆளுமைத்திறன் மேம்பாடு" என்ற தலைப்பில் உதவிப்பேராசிரியர் முனைவர் K.செல்லப்பாண்டியன் உரையாற்றினார்.
* 16.09.2019 முதல் 18.09.2019 வரை மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் சென்னை, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் (EDIITN) சார்பில் நடைபெற்ற கல்வி நிறுவனங்களில் தொழில் முனைத்திறன் மேம்பாடு என்ற தலைப்பிலான ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் K.செல்லப்பாண்டியன் மற்றும் முனைவர் S.சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.
* 16.09.2019 முதல் 25.09.2019 வரையிலான நாட்களில் திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் கல்வியியல் புலத்தில் நடைபெற்ற "Advanced Research Methodology" என்ற தலைப்பிலான ஆராய்ச்சி முறைகள் குறித்த பயிற்சிப்பட்டறையில் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் திரு.R.குருமேகலைராஜன் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.
* 23.09.2019 அன்று துறையின் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற மாணவர் மென்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் செய்திகள் வாசித்தல், கட்டுரை சமர்ப்பித்தல், 'நான் யார்?' புதிர் நிகழ்ச்சி, செய்தி விமர்சனம், வணிக வினாடிவினா, வரவேற்புரை மற்றும் நன்றியுரை ஆகிய நிகழ்வுகளை மாணவர்கள் நிகழ்த்தினர்.
* 24.09.2019 அன்று திண்டுக்கல், அம்பிளிக்கை, புனித ஜேக்கப் நினைவு கிறித்தவக் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற "மென்திறன் மேம்பாடு" என்ற தலைப்பிலான ஒருநாள் பயிற்சிப்பட்டறையில் உதவிப்பேராசிரியர் முனைவர் K.செல்லப்பாண்டியன் உரையாற்றினார்.
* 27.09.2019 அன்று விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் வணிகவியல் துறை சார்பாக நடைபெற்ற "Digital Library and Its impact on Indian Economy, என்ற தலைப்பில் நடைபெற்ற மாநில அளவிலான கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "Digital Transformation in Education Issues and Challenges" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
* 27.09.2019 அன்று விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் வணிகவியல் துறை சார்பாக நடைபெற்ற "Digital Library and Its impact on Indian Economy, என்ற தலைப்பில் நடைபெற்ற மாநில அளவிலான கருத்தரங்கில் முதலாமாண்டு வணிகவியல் மாணவர் B.வினித் கலந்து கொண்டார்.
* 28.09.2019 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 53வது பட்டமளிப்புவிழாவில் உதவிப்பேராசிரியர் முனைவர் C.வடிவேல் பல்கலைக்கழகத்தின் கல்விமன்றக்குழு உறுப்பினராக சென்று கலந்து கொண்டார்.
* 03.10.2019 அன்று சத்தியமங்கலம், காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர். S.பசுபதி "A Study on E-Commerce Recent Trends of Foreign Direct Investment in India and its Impact on Economic Growth" என்ற தலைப்பிலான இரு ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தார்.
* 19.10.2019 அன்று மதுரை, மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் மற்றும் வணிகவியல் கணினிப்பயன்பாட்டுத்துறை இணைந்து நடத்திய "Transformation of Business Management Economy in Digital Era" என்ற தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் இணைப்பேராசிரியர் முனைவர் தி.வெங்கடேசன் கலந்து கொண்டு "Impacts and Transforming of Digital Payments in India" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

## கணிதவியல் துறை

* 10.09.2019 அன்று கொடைக்கானல், இந்திய வானியல் இயற்பியல் நிறுவனம் மற்றும் கொடைக்கானல் சூரிய ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றிக்கு துறையின் இரண்டாமாண்டு மாணவர்கள் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர் C.இராஜன் மற்றும் திரு.C.வேல்முருகன் ஆகியோர் கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர்.
* 12.09.2019 மற்றும் 13.09.2019 ஆகிய நாட்களில் மதுரை மற்றும் மதுரை வட்டார பள்ளி மாணவர்களுக்கு உதவிப்பேராசிரியர் M.நாகராஜ் வேதக்கணிதம் கற்பித்தார்.
* 14.09.2019 அன்று கணிதவியல் துறையில் நடைபெற்ற "Training Programme for Banking Exam" என்ற தலைப்பிலான வேலைவாய்ப்பு வழிகாட்டி நிகழ்ச்சியில் மதுரை, பாரத ஸ்டேட் வங்கியின் நிர்வாக அலுவலக வழக்கறிஞர் திரு.V.S.ஜோஸ்பாபு மற்றும் அறந்தாங்கி, பாரத ஸ்டேட் வங்கியின் அலுவலர் திரு.K.ஜெகந்நாத் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.
* 28.09.2019 அன்று மதுரை, விராட்டிப்பத்து ஓம் சாதனா மெட்ரிக் பள்ளியில் சேவாபாரதி இயக்கத்தின் தென்தமிழ்நாடு பிரிவு சார்பாக நடைபெற்ற வேதக்கணிதம் குறித்து 29வது பயிற்சிப்பட்டறையில் மூன்றாமாண்டு கணிதவியல் மாணவர்கள் இருவர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.
* 16.09.20189 முதல் 21.09.2019 வரையிலான நாட்களில் மதுரை, கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரியின் கணிதவியல் துறையில் நடைபெற்ற Mini MTTS-2019 மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் இரண்டாமாண்டு மாணவர் S.ஜெய்விக்னேஷ் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.

## இயற்பியல் துறை

* 12.09.2019 அன்று ஒலி-ஒளி அரங்கில் இயற்பியல் துறையில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை (Guest Lecture Programme) நிகழ்ச்சியில் மதுரை, E-Carrerpluz Info India Pvt. ltd. நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு.M.சதீஷ்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Testing, Maintenance and Servicing of Electronic Gadgets' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
* 19.09.2019 அன்று காரைக்குடி, CSIR-CECRI வளாகத்தில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியினைத் துறையின் பேராசிரியர்கள் திரு.P.ஜெயசங்கர், திரு.N.S.லெட்சுமிகாந்தன், திரு.V.ராஜேந்திரன் மற்றும் திரு.S.கணேசன் ஆகியோர் உடன் சென்று இயற்பியல்துறை மூன்றாமாண்டு மற்றும் முதலாமாண்டு மாணவர்கள் கண்டுகளித்தனர்.
* 26.09.2019 அன்று இயற்பியல் துறையின் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற (Thursday Meet-7) மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் திருக்குறள் உரை, 'விண்வெளி மனிதன்' என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தல், இயற்பியல் விதி, வினாடி வினா, அறிவியல் செய்திகள் வாசித்தல் ஆகிய நிகழ்ச்சிகளை துறையின் மூன்றாமாண்டு மாணவர்கள் நிகழ்த்தினர்.
* 28.09.2019 அன்று இயற்பியல் துறையின் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் முன்னாள் மாணவர்கள் திரு.G.பாண்டுரங்கள் இயற்பியல்துறைக்கு ஒரு மடிக்கணினி மற்றும் ஒரு தொலைநோக்குக் கருவி ஆகியவைகளை அன்பளிப்பாக வழங்கினார். மேலும் துறையின் சிறந்த மாணவர்களுக்கான ஊக்கத்தொகைக்காக கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து முன்னாள் மாணவர்கள் இணைந்து ரூ,13,000/- வழங்கினர்.
* 15.10.2019 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் இயற்பியல் துறை சார்பாக நடைபெற்ற பாரத ரத்னா டாக்டர் APJ அப்துல் கலாமின் பிறந்தநாள் மற்றும் தேசிய இளைஞர் எழுச்சி நாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் வரலாற்றுத்துறை உதவிப்பேராசிரியர் திரு.M.P.குமரேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு. "அப்துல் கலாம் ஒரு சகாப்தம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
* 17.10.2019 அன்று இயற்பியல் துறை கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்ற Thursday Meet-8" மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் இயற்பியல் விதி குறித்த விளக்கம், கட்டுரை சமர்ப்பித்தல் அறிவியல் வினாடி வினா ஆகிய நிகழ்வுகளை முதலாமாண்டு மாணவர்கள் நிகழ்த்தினர்.

## வேதியியல் துறை

* 16.09.2019 முதல் 18.09.2019 வரை மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் சென்னை, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் (EDIITN) சார்பில் நடைபெற்ற கல்வி நிறுவனங்களில் தொழில் முனைத்திறன் மேம்பாடு என்ற தலைப்பிலான ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் G.இராஜ்குமார் கலந்து கொண்டார்.
* 20.09.2019 முதல் 03.10.2019 வரையிலான நாட்களில் திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற கல்லூரி பேராசிரியர்களுக்கான புத்தாக்கப்பயிற்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் G.ராஜ்குமார் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.
* 24.09.20189 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வேதியியல் புலத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிக் குழுக்கூட்டத்தில் உதவிப்பேராசிரியர் முனைவர் S.எல்லைராஜா கலந்து கொண்டார்.
* 26.09.2019 அன்று காரைக்குடி, CSIR-CECRI மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற 78ம் ஆண்டு நிறுவன தின அறிவியல் கண்காட்சியில் துறையின் அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் அனைத்து பேராசிரியர்கள் உடன் சென்று கலந்துகொண்டு கண்காட்சியைக் கண்டுகளித்தனர்.
* 23.09.2019 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் Material Science துறையில் நடைபெற்ற "Advanced Materials-(AM)-2019" என்ற தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் M.கணபதி மற்றும் முனைவர் G.பாலகிருஷ்ணன் கலந்து கொண்டனர்.
* 19.10.2019 அன்று கிருஷ்ணன் கோவில், கலசலிங்கம் பல்கலைக்கழத்தில் வேதியியல் துறையில் நடைபெற்ற பல்திறன் போட்டிகளில் 11 மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை பெற்றுவந்தனர். உதவிப்பேராசிரியர் திரு.M.இரகு மாணவர்களை அழைத்துச் சென்று வந்தார்.
* 25.10.2019 அன்று இந்திய சுற்றுலா அமைச்சகத்தால் நடத்தப்பட்ட Paryatan Parv-2019 இணைய வழி வினாடி வினா போட்டியில் உதவிப்பேராசிரியர் முனைவர் G.ராஜ்குமார் கலந்து கொண்டார்.
* 25.10.2019 அன்று இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை மற்றும் விக்ஞான் பிரசார் சார்பாக நடைபெற்ற இணைய வழி வினாடி வினா போட்டியில் உதவிப்பேராசிரியர் முனைவர் G.ராஜ்குமார் கலந்து கொண்டார்.
* 04.11.2019 முதல் 14.11.2019 வரை இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உயர்கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கான கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீடு (Teaching-Learning and Evaluation for Faculty Members of Higher Educational Institutions (HEIs) பற்றிய பயிற்சி பட்டறையில் முனைவர் G.இராஜ்குமார் கலந்து கொண்டார்.
* 14.10.2019 அன்று மதுரை, சமக்ரா சிக்ஷா செகண்டரி மாவட்ட அலுவலகம் சார்பாக மதுரை, OCPM மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஜவஹர்லால் நேரு, தேசிய அறிவியல், கணிதம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த கண்காட்சி என்ற தலைப்பிலான மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் M.கணபதி நடுவராகக் கலந்து கொண்டார்.

## தாவரவியல் துறை

* 13.09.2019 அன்று சிவகாசி, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியின் தாவரவியல் துறையில் நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கிடையிலான பல்திறன் போட்டிகளில் உதவிப்பேராசிரியர்கள் முனைவர் C.சௌந்தரராசு மற்றும் முனைவர் J.அருள்ராஜ் தலைமையிலான மாணவர் அணியினர் கலந்து கொண்டு இரண்டு போட்டிகளில் பரிசுகள் வென்றனர்.
* 18.09.2019 அன்று விருதுநகர், VHNSN கல்லூரியின் தாவரவியல் துறையில் "Emerging Trends in Plant Science" என்ற தலைப்பில் நடைபெற்ற மாநில அளவிலான கருத்தரங்கில் மாணவர்கள் கலந்துகொண்டனர்.
* 19.09.2019 அன்று சிவகாசி, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியின் தாவரவியல் மற்றும் தாவர உயிரி தொழில் நுட்பத்துறையில் நடைபெற்ற "BLOSSOM" கல்லூரிகளுக்கிடையிலான தொழில்நுட்ப நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியர் முனைவர் C.சௌந்தர்ராசு கலந்து கொண்டார்.
* 20.09.2019 அன்று திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், தாண்டிக்குடி மலைப்பகுதியில் அமைந்துள்ள மண்டல காபி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தாவரவியல் துறை அனைத்து மாணவர்கள் மற்றும் உதவிப்பேராசிரியர்கள் முனைவர் C.சௌந்தர்ராசு மற்றும் முனைவர் J.அருள்ராஜ் ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டனர்.
* 25.09.2019 அன்று தாவரவியல் துறையின் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சியில் விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் தாவரவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் S.முத்துக்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "Resources Biodiversity" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்.

## விலங்கியல் துறை

* 03.09.2019 அன்று திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் UGC மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற 105வது புத்தாக்கப் பயிற்சியில் இணைப்பேராசிரியர் திரு.V.பார்த்தசாரதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "Value Education" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்.
* 19.09.2019 அன்று விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் விலங்கியல் துறையில் நடைபெற்ற மாநில அளவிலான கருத்தரங்கில் இளங்கலை மாணவர்கள் 12பேர் உதவிப்பேராசிரியர் முனைவர் K.ரமேஷ்குமார் உடன் சென்று கலந்து கொண்டனர்.
* 11.10.2019 முதல் 13.10.2019 வரையிலான நாட்களில் வாரணாசி, ஹந்தி பனாரஸ் பல்கலைக்கழத்தின் சுற்றுச்சூழல் மற்றும் நீடித்த வளர்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற "Sustainable Agricultural Development in Changing Global Scnenario" என்ற தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் M.பவுன்ராஜ் கலந்து கொண்டு "Phytotoxic Effects of Novel Molecule 6(4-7 hydcoxy-heptul) Quinone from the Leaves of the Milk weed Perguloria dememia on the cotton Bollworm Helicoverpa armigera and the Tobacco Cutworm Spodoptera litura " என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார். மேலும் அக்கருத்தரங்கில் இளம் விஞ்ஞானி என்ற விருதினை பெற்றார்.
* 14.10.2019 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், MGR கல்லூரியின் விலங்கியல் துறையில் நடைபெற்ற முனைவர் பட்ட ஆய்வு மாணவரது ஆய்வுகுறித்த முனைவர் பட்ட ஆய்வுக்குழு கூட்டத்தில் உதவிப்பேராசிரியர் முனைவர் K.ரமேஷ்குமார் குழு உறுப்பினராகக் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.
* 19.09.2019 அன்று விலங்கியல் துறையின் கருத்தரங்க கூடத்தில் நடைபெற்ற முனைவர் பட்ட ஆய்வு வாய்மொழித்தேர்வில் உதவிப்பேராசிரியர் திரு.K.காமாட்சி தனது "Ecofriendly Management of Root-Knot Nemotode (Meloidogyru Incogrita) using Different Botanicals on chosen Host Plant and its Metobolism" என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையை சமர்ப்பித்தார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் P.சௌந்திரபாண்டியன் புறத்தேர்வராகக் கலந்து கொண்டு தேர்வினை நடத்தினார். ஆய்வு வழிகாட்டி விலங்கியல் துறை முன்னாள் பேராசிரியர் முனைவர் N.நாட்டுத்துரை மற்றும் இணைவழிகாட்டி மதுரை தியாகராசர் கல்லூரியின் விலங்கியல் துறை முன்னாள் பேராசிரியர் முனைவர் N.K.ஆஷாதேவி ஆகியோர் உடன் இருந்தனர்.
* 28.09.2019 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 53வது பட்டமளிப்பு விழாவில் உதவிப்பேராசிரியர் K.காமாட்சி கலந்துகொண்டு முனைவர் பட்டம் பெற்றார்.
* 14.11.2019 அன்று திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் UGC மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற 108வது புத்தாக்கப் பயிற்சியில் இணைப்பேராசிரியர் திரு.V.பார்த்தசாரதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "Environmental Concerns" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்.
* 18.11.2019 அன்று திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற பேராசிரியர்களுக்கான புத்தறிவுப் பயிற்சியில் இணைப்பேராசிரியர் திரு.V.பார்த்தசாரதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Value Education' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
* 22.11.2019 அன்று கோயமுத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தின் மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற பேராசிரியர்களுக்கான புத்தறிவுப் பயிற்சியில் இணைப்பேராசிரியர் திரு.V.பார்த்தசாரதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 'Environmental Issues' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
* 27.11.2019 அன்று சிவகாசி, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடைபெற்ற விலங்கியல்துறை உதவிப்பேராசிரியர் பணிக்கான நேர்முகத் தேர்வில் இணைப்பேராசிரியர் திரு.V.பார்த்தசாரதி பல்கலைக்கழக பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

## கணினி அறிவியல் துறை

* 15.09.2019 மற்றும் 16.09.2019 ஆகிய நாட்களில் கணினி அறிவியல் துறையின் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவர்கள் உதவிப்பேராசிரியர் திரு.G.பாலாஜி, திரு.C.ரஞ்சித்குமார், திரு.P.கோபிநாத் மற்றும் திரு.S.சுந்தர்ராஜ் ஆகியோர் தலைமையில் கோயமுத்தூர் Accent Techno-Soft மென்பொருள் நிறுவனத்திற்கு தொழிற்சாலை பார்வையிடல் நிகழ்ச்சிக்காக சென்று வந்தனர்.
* 27.09.2019 அன்று சிவகங்கை மாவட்டம், பொட்டப்பாளையம், KLN பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையேயான தொழில்நுட்ப போட்டிகளில் துறை மாணவர்கள் 16பேர் கலந்து கொண்டனர்.

## வணிகவியல் கணினி பயன்பாட்டுத் துறை

* 06.09.2019 அன்று விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியின் வணிகவியல் கணினிப்பயன்பாட்டுத்துறை சார்பாக நடைபெற்ற 'Practical Applications of GST and Its Impact on Indian Economy' என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறையில் உதவிப்பேராசிரியர் M.பிரேமானந்தம் கலந்துகொண்டார்.
* 15.09.2019 அன்று திண்டுக்கல், வணிகவியல் கணினிப்பயன்பாட்டுத் துறையின் 107 மாணவர்கள் மற்றும் துறைப்பேராசிரியர்கள் திரு.C.சுந்தரம், திரு.M.மோகன், முனைவர் M.பிரேமானந்தம், திரு.P.முருகன் மற்றும் திரு.V.வேல்பாண்டியன் ஆகியோர் பால விக்னா நூற்பாலையினை பார்வையிட்டு நூல் நூற்றல் குறித்த தங்கள் சந்தேகங்களுக்கான விளக்கங்களைக் கேட்டறிந்தனர்.
* 17.09.2019 மதுரை, மதுரைக் கல்லூரியில் M.S. செல்லமுத்த அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பாக நடைபெற்ற உலக தற்கொலை தடுப்பு தினம் பயிற்சி பட்டறையில் உதவிப்பேராசிரியர் திரு..R.கார்த்திகேயன் கலந்து கொண்டார்.
* 18.09.2019 அன்று மதுரை, அமெரிக்கன் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற 'Multi Lingual Computing Application' என்ற தலைப்பிலான ஒருநாள் தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் M.வேல்பாண்டி உடன் மாணவர்கள் சென்று கலந்துகொண்டார்.

* 25.09.2019 அன்று மதுரை, அருள் ஆனந்தர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் திரு.P.முருகன் மற்றும் துறை மாணவர்கள் 10 பேர் கலந்துகொண்டனர்.
* 28.09.2019 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 53வது பட்டமளிப்புவிழாவில் உதவிப்பேராசிரியர் M.பிரேமானந்தம் கலந்து கொண்டு முனைவர் பட்டம் பெற்றார்.
* 25.09.2019 அன்று மதுரை, கருமாத்தூர், அருளானந்தர் கல்லூரியின் வணிகவியல் கணினிப்பயன்பாட்டுத்துறையில் Intelligence Digital Transformation in Commercial Business என்ற தலைப்பில நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் மூன்றாமாண்டு மாணவர்கள் 10பேர் மற்றும் உதவிப்பேராசிரியர் திரு.P.முருகன் மாணவர்களை அழைத்து சென்றுவந்தார்.
* 31.10.2019 அன்று ஆலங்கொட்டாரம் அரசு மேல்நிலைப்பள்ளி பன்னிரெண்டாம் வணிகவியல் மாணவர்களுக்கு பொதுத்தேர்வு உட்பட்ட பாடங்களுக்கு கணினிப் பயிற்சி நமது கல்லூரியின் கணினி ஆய்வகத்தில் உதவிப்பேராசிரியர் திரு..R.கார்த்திகேயன் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

## உடற்கல்வித் துறை

* 03.09.2019 முதல் 04.09.2019 வரையிலான நாட்களில் தேனி மாவட்டம், உத்தமபாளையம், HKRH கல்லூரியில் நடைபெற்ற மதுரை, காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையிலான பூப்பந்து போட்டியில் நமது கல்லூரி அணியினர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் M.சீனிமுருகன் உடன் சென்று கலந்து கொண்டனர்.
* 04.09.2019 மதுரை, நாகமலை புதுக்கோட்டை S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக “B” மண்டலங்களுக்கிடையிலான கோ-கோ போட்டியில நமது கல்லூரி அணியினர் கலந்து கொண்டனர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் உடன் சென்று கலந்து கொண்டார்.
* 12.09.20189 அன்று மதுரை சௌராஷ்ரா கல்லூரியில் நடைபெற்ற காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையிலான கூடைப்பந்து போட்டியில் நமது கல்லூரியின் கூடைபந்து அணியினர், உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் உடன் சென்று கலந்து கொண்டனர்.
* 12.09.2019 மற்றும் 13.09.2019 ஆகிய நாட்களில் மதுரை, நாகமலை புதுக்கோட்டை S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான கோ-கோ போட்டியில நமது கல்லூரி மாணவர்கள் S.யுவராஜ் (III CHE), M.சதீஷ் (I MATHS) P.விஜய் விக்னேஷ்ராஜா (I PHY) ஆகியோர் “B” மண்டல அணி சார்பாகக் கலந்து கொண்டார்.
* 19.09.2019 மற்றும் 20.09.2019 ஆகிய நாட்களில் மதுரை, புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்லூரிகளின் கால்பந்து அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியிலான போட்டிகளில் நமது கல்லூரி கால்பந்து அணி மாணவர்கள் J.பாண்டி (III Eng) N.யுவராஜ் (II CA) மற்றும் S.யுவராஜ் (I B.Com) ஆகியோர் கலந்து கொண்டு விளையாடினர்.
* 23.09.2019 முதல் 26.09.2019 வரையிலான நாட்களில் திண்டுக்கல் GTN கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டல அளவிலான கால்பந்து போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் S.பாண்டி (III Eng), N.யுவராஜ்(II CA) மற்றும் S.யுவராஜ் (I B.COM) ஆகியோர் “B’ மண்டல அணிசார்பாக கலந்து கொண்டு விளையாடினர்.
* 24.09.2019 அன்று மதுரை திருநகரில் நடைபெற்ற காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையிலான வளைபோல் பந்து போட்டியில் நமது கல்லூரியின் வளைகோல் பந்து அணியினர், உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் உடன் சென்று கலந்து கொண்டனர்.
* 27.09.2019 அன்று மதுரை நாகமலைபுதுக்கோட்டை S.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் நடைபெற்ற காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையிலான கைபந்து போட்டியில் நமது கல்லூரியின் கைபந்து பந்து அணியினர் கலந்து கொண்டனர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் உடன் சென்றார்.
* 27.09.2019 மற்றும் 28.09.2019 ஆகிய நாட்களில் மதுரை, ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையான வளைகோல்பந்து போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் “B” மண்டல அணி சார்பாகக் கலந்து கொண்டு விளையாடினர். P.சுதேசமித்திரன் (III B.COM) J.ரஞ்சித்ராஜா (III B.COM), R.கிரண்குமார் (III CA), P.பிரகாஷ் (IIIPhy), G.பிரசன்ன பாண்டியன் (II Maths), P.துரைராஜன் (I CA) உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் மாணவர்கள் உடன் சென்றார்.
* 17.09.2019 முதல் 20.09.2019 வரையிலான நாட்களில் திண்டுக்கல், GTN கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையோன கூடைப்பந்து போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் J.விக்னேஸ்வரன் (III PHY) G.ஹரிஹரன் (III CA), G.யோகேஸ் (II CA) மற்றும் P.விக்னேஸ்வரன் (I ECO) ஆகியோர் “B” மண்டல அணி சார்பாக விளையாடினர்.
* 10.10.2019 மற்றும் 11.10.2019 ஆகிய நாட்களில் மதுரை, செந்தாமரைக் கல்லூரியில் நடைபெற்ற காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையிலான கையுந்து பந்து போட்டியில் நமது கல்லூரியின் கையுந்து பந்து அணியினர் கலந்து கொண்டு விளையாடினர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் மாணவர்களை அழைத்துச் சென்றார்.
* 03.10.2019 அன்று மதுரை, செந்தாமரைக் கல்லூரியில் நடைபெற்ற காமராசர் பல்கலைக்கழக ‘B’ மண்டல கல்லூரிகளுக்கிடையிலான கபாடி போட்டியில் நமது கல்லூரியின் கபாடி அணியினர் கலந்து கொண்டு விளையாடினர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் மாணவர்களை அழைத்துச் சென்றார்.
* 10.10.2019 மற்றும் 12.10.2019 வரையிலான நாட்களில் சிவகாசி, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழய மண்டலங்களுக்கிடையிலான கைப்பந்து போட்டியில் நமது கல்லூரியின் கைப்பந்து அணி மாணவர்கள் S.காசிநாதன் (III HIS), J.ஜெயபிரதாப் (III HIS), P.காசிவிஸ்வநாதன் (III BOT), P.விக்னேஸ்வரன் (II B.COM), யு.சீனிவாசன் (II B.COM), R.ராஜ்குமார் (II B.COM), M.கிஷோர் (II ECO) மற்றும் R.விஷ்வா (IIPHY) ஆகிய மாணவர்கள் “B”மண்டல அணி சார்பாக கலந்து கொண்டனர்.
* 14.10.2019 மற்றும் 15.10.2019 ஆகிய நாட்களில் விருதுநகர், செந்திக்குமார நாடார் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான கபாடி போட்டியில் நமது கல்லூரியின் கபாடி அணி மாணவர்கள் T.மணிபாரதி (II CA) மற்றும் V.பொன்ராஜ் (II HIS) ஆகியோர் “B” மண்டல அணி சார்பாக விளையாடினர்.
* 16.10.2019 அன்று திண்டுக்கல் GTN கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக குத்துச்சண்டை அணி மாணவர் தேர்வில் நமது கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் கலந்து கொண்டார்
* 17.10.2019 மற்றும் 18.10.2019 ஆகிய நாட்களில் மதுரை, ரேஸ்கோர்ஸ், டாக்டர் எம்.ஜி.ஆர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையிலான 54ஆம் ஆண்டு ஆண்கள் மற்றும் பெண்கள் தடகளப் போட்டிகளுக்கான நடுவராக கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் கலந்து கொண்டார்.
* 22.10.2019 மற்றும் 23.10.2019 ஆகிய நாட்களில் மதுரை, அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக மண்டலங்களுக்கிடையிலான கையுந்து பந்து போட்டியில் நமது கல்லூரியின் கையுந்து பந்து அணி மாணவர்கள் R.தினேஷ்ராஜா (III CA), P.ராஜரிஷி (II Maths) மற்றும் R.ஜவஹர் (II CS) ஆகிய மாணவர்கள் “B” மண்டல அணி சார்பாக விளையாடினர். உடற்கல்வி இயக்குநர் முனைவர் M.சீனிமுருகன் மாணவர்கள் உடன் சென்றார்.
* 17.10.2019 மற்றும் 18.10.2019 ஆகிய மதுரை, தடகள போட்டியில் S.சுரேஷ் (III ECO), V.சுரேந்தர் (II PHY) மற்றும் M.சித்தார்த்தன் (II PHY) ஆகிய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## நூலகத் துறை

* 03.10.2019 மற்றும் 04.10.2019 ஆகிய நாட்களில் கல்லூரியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் கல்லூரியின் மைய நூலகம் சார்பாக திறந்தவெளி கலையரங்கில் புத்தகக் கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெற்றது. இதில் மதுரை, ரேஸ்கோர்ஸ், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் அச்சகம் மற்றும் நியூ சென்சுரி புக் ஹவுஸ் நிறுவனங்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தங்கள் பதிப்புக்களை காட்சிப்படுத்தினர். கண்காட்சியில் கலந்து கொண்ட கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் புத்தகங்களை வாங்கினர்.
* 15.11.2019 மற்றும் 16.11.2019 ஆகிக நாட்களில் கோயமுத்தூர்,குனியமுத்தூர் ஸ்ரீராகிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற "Transfoming Academic Libraries: Vision 2030 (ICTAL2030)" என்ற தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கில் கல்லூரி நூலகர் முனைவர் ஆ.பிரபாகரன் கலந்து கொண்டு "Emerging Technologies of Satellite and Mobile Communication in Distance Education" என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

## நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)

* 12.09.2019 அன்று மாலை கல்லூரியின் திறந்த வெளி கலையரங்கில் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் நடைபெற்ற தொழுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மதுரை, கோச்சடை, ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவரல்லா கண்காணிப்பாளர் திரு.ப.சேஷாத்ரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "Leprosy, Symptoms, Causes, Prevention and Trent" என்ற தலைப்பில் மாணவர்களிடையே உரையாற்றினார்.
* 15.09.2019 அன்று புதுக்கோட்டை மாவட்டம் பாண்டிபத்திரத்தில் உள்ள விநாயகர் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கான ஒரு நாள் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் நாட்டு நலப்பணித்திட்ட செயல் அலுவலர் முனைவர் S.சந்திரசேகரன் தலைமையிலான 50 மாணவர்கள் கலந்து கொண்டு சேவைகள் ஆற்றினர்.
* 20.09.2019 அன்று கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக கல்லூரி நுழைவாயில் பகுதியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் தி.வெங்கடேசன் மரக்கன்றுகள் நட்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். நாட்டு நலப்பணித்திட்ட செயல் அலுவலர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டு 50 மரக்கன்றுகளை நட்டனர்.
* 22.09.2019 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு நாள் சிறப்பு முகாமில் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் K.செல்லப்பாண்டியன் மற்றும் முனைவர் S.சந்திரசேகரன் ஆகியோர் தலைமையிலான நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் 52பேர் கலந்து கொண்டு பல்கலைக்கழக வளாகத்தில் 600 மரக்கன்றுகள் மற்றும் 500 விதைகள் நடும் பணியில் ஈடுபட்டனர்.
* 13.10.2019 அன்று வாடிப்பட்டி, வருவாய்த்துறை சார்பாக விவேகானந்த கல்லூரி மற்றும் சோழவந்தான் தீயணைப்புத்துறை இணைந்து பேரிடர் மேலாண்மை மற்றம் இயற்கை சீரழிவுகள் குறித்த விழிப்புணர்வு பேரணியில் நமது கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் 50 பேர் கலந்து கொண்டனர். இப்பேரணியினை கல்லூரி முதல்வர் முனைவர் தி.வெங்கடேசன் கொடியசைத்து துவக்கி வைத்தார். வாடிப்பட்டி மண்டல துணை வட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன், வட்டாட்சியர் திரு.கிருஷ்ணகுமார், தீயணைப்புத்துறை அலுவலர் திரு.பழனிமுத்து ஆகியோர் பேரணியில் கலந்து கொண்டனர். திட்ட அலுவலர்கள் முனைவர் K.செல்லப்பாண்டியன், முனைவர் S.சந்திரசேகரன் மற்றும் முனைவர் K.காமாட்சி ஆகியோர் பேரணியை வழி நடத்தினர்.
* 14.10.2019 முதல் 26.10.2019 வரையிலான நாட்களில் திருச்சி, நேஷனல் கல்லூரியில் இந்திய அரசின், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை சார்பாக நடத்தப்பட்ட புதுதில்லி, குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொள்ளும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கான தேர்வு முகாமில் நமது கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் B.வாசுதேவன் (II CS) கலந்து கொண்டார்.
* 21.10.2019 அன்று மேலக்கால், அரசு ஆரம்ப சுகாதாரம் மற்றும் விவேகானந்த கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் இணைந்து மேலக்கால், தச்சம்பத்து மற்றும் திருவேடகம் ஆகிய கிராமங்களில் நடத்திய டெங்கு விழிப்புணர்வு பேரணியில் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் 200 பேர் கலந்து கொண்டனர். துவக்க விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் தி.வெங்கடேசன் தலைமையுரையாற்றினார். மதுரை மாவட்ட மலேரியா அலுவலர் திரு.ஜான்விக்டர் பேரணியை துவக்கி வைத்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி கீதா, வட்டார மருத்தவ அலுவலர் திரு.மனோஜ் பாண்டியன் ஆகியோர் பேரணியில் கலந்து கொண்டனர்.
* 25.10.2019 அன்று நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார மையம் இணைந்து நடத்திய தேசிய ஆயுர்வேத நாளாக கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக மேலக்கால் ஆயுர்வேத உதவி மருத்துவர் K.ஷேக்பரீத் மற்றும் மருத்துவர் S.கனேஷ் ஆகியோர் கலந்து கொண்டு "நீண்ட ஆரோக்கியமான வாழ்வுக்கு ஆயுர்வேதம்" என்ற தலைப்பில் மாணவர்களிடம் உரை நிகழ்த்தினர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் திரு.P.குமரேசன், முனைவர் T.செல்லத்துரை மற்றும் முனைவர் K.காமாட்சி ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைந்து வழிநடத்தினர்.

## தேசிய மாணவர் படை (NCC)

* 18.09.2019 முதல் 29.09.2019 ஆகிய நாட்களில் தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழத்தில் நடைபெற்ற புதுதில்லியில் நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பில் பங்குபெற உள்ள தேசியமாணவர்படை மாணவர்களுக்கான தேர்ச்சி முகாமில் கல்லூரியின் தேசியமாணவர்ப்படை மாணவர்கள் 10போ கலந்து கொண்டனர்.
* 30.09.2019 முதல் 21.11.2019 வரையிலான நாட்களில் சென்னை, தாம்பரம் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற புதுதில்லியில் குடியரசு தின அணிவகுப்பில கலந்து கொள்ளும் தேசிய மாணவர்படை மாணவர்களுக்கான பயிற்சி மற்றும் தேர்வு முகாமில் (Pre IGC & IGC) நமது கல்லூரியின் தேசிய மாணவர்படை மாணவர்கள் J.ஸ்ரீதர் (II B.Com) A.ராயப்பன் (II His) P.P.வெங்கடேஸ்வரன் (II His), K.பூமணி (II Eco) மற்றும் A.ஆதிஅபினேஷ் (II Phy) ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் J.ஸ்ரீதர் (II B.Com) மற்றும் A.ராயப்பன் (II His) ஆகிய இருவரும் அடுத்த நிலை முகாமிற்கு தேர்வாகினர்.
* 14.09.2019 முதல் 28.09.2019 வரை ராஜஸ்தான் மாநிலம், நாக்பூர் கம்ப்டீயில் உள்ள தேசிய மாணவர்படை அலுலவல பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற தேசிய மாணவர்படை மாணவர்களுக்கான பயிற்சி முகாமில் R.பாலமுருகன் (III B.COM) கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.
* 24.09.2019 முதல் 03.10.2019 வரையிலான நாட்களில் திண்டுக்கல் மாவட்டம், அக்கரைப்பட்டி, SSM CBSE பள்ளியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த வருடாந்திர பயிற்சி முகாமில (CATC) மூன்றாமாண்டு தேசிய மாணவர்படை மாணவர்கள் 22 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.
* 28.09.2019 அன்று திண்டுக்கல், அக்கரைப்பட்டி, SSM CBSE பள்ளியில் நடைபெற்ற தேசிய மாணவர்படை மாணவர்களுக்கான துப்பாக்கி சுடும் பயிற்சியில் நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவர்கள் 11 பெர் கலந்து கொண்டனர்.
* 03.10.2019 முதல் 09.11.2019 வரையிலான நாட்களில் சென்னையில் நடைபெற்ற தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான புதுதில்லி, குடியரசி தின அணிவகுப்பில் கலந்து கொள்வதற்கான தேர்வு முகாமில் A.ராயப்பன் (II HIS) மற்றும் J.ஸ்ரீதர் (II B.COM) ஆகிய தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.
* 07.10.2019 முதல் 22.10.2019 வரை புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான பயிற்சி முகாமில் R.பாலமுருகன் (III B.Com) கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.
* 11.11.2019 முதல் 21.11.2019 வரை தஞ்சாவூர், வல்லம், பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தேசிய மாணவர் படை மாணவர்களுக்கான தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் (ஜேஊ) 5 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## இளைஞர் செஞ்சிலுவை சங்கம்

* 27.09.2019 அன்று கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் நிழச்சியில் செஞ்சிலுவை சங்க மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டனர். கல்லூரி செயலர், குலபதி, முதல்வர், துணை முதல்வர் மற்றும் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் முனைவர் P.பட்டினத்தார் ஆகியோர் உடனிருந்தனர்.

## வேலைவாய்ப்பு மையம்

* 15.10.2019 அன்று நமது கல்லூரியின் வேலைவாய்ப்பு மையம் சார்பாக ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் மேம்பாட்டு நிகழச்சியில் மதுரை, பாஸ்போட் அலுவலக அலுவலர் திருமதி விஜயலட்சுமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "How to Apply for Passport Online" என்ற தலைப்பில் இணையவழியாக கடவுச்சீட்டு பெற விண்ணப்பித்தல் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார். மேலும் கல்லூரி மாணவர்கள் 100 பேர் பாஸ்போர்ட் எடுப்பதற்கு இணையதளம் மூலமாக விண்ணப்பித்தனர்.
* 16.10.2019 அன்று கல்லூரியின் வேலைவாய்ப்பு மையம் சார்பாக ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் மேம்பாட்டு நிகழச்சியில் மதுரை, PAN Card Integrated Services நிறுவன அலுவலர் திரு.செல்வகணேஷ் சிறப்பு விருந்தினராகக் கலநது கொண்டு "How to Apply for PAN Card" என்ற தலைப்பில் PAN Card பெறுவதன் அவசியம் மற்றும் பெறும் முறைகள் குறித்து விரிவுரையாற்றினார். மேலும் கல்லூரி மாணவர்கள் 107 நபர்களுக்கு PAN CARD எடுக்க விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

## IQAC

* 03.09.2019 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் கல்லூரியின் அக தர உத்தரவாத மையம் சார்பாக நடைபெற்ற ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் விருதுநகர், செந்திக்குமார நாடர் கல்லூரியின் தாவரவியல் துறை இணைப்பேராசிரியர் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் கூடுதல் முதன்மையர் முனைவர் P.மேகலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "Hand on Training in Public Finance Management System' என்ற தலைப்பில் உரையாற்றினார்.
* 09.10.2019 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் கல்லூரியின் அக தர உத்தரவாத மையம் சார்பாக நடைபெற்ற ஆசிரியர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் வணிகவியல் துறை மேனாள் துறைத்தலைவர் பேரா.க.மயில்வேல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இராமலிங்க அடிகளார் ஓர் ஆசிரியர் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## விவேகா நுண்கலை மன்றம்

* 08.09.2019 அன்று மதுரை, தெய்வ நெறிக்கழகத்தில் நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கிடையேயான ஸ்ரீமத் பகவத்கீதை ஒப்புவித்தல் போட்டியில் விவேகா நுண்கலை மன்றம் சார்பாக K.விஷ்வா (II Zoo.) கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்றார்.
* 13.09.2019 அன்று மதுரை, காமராசா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு தின சிறப்பு நிகழ்ச்சிகளில் நமது கல்லூரியின் விவேகா நுண்கலை மன்ற மாணவர்கள் வரலாற்றுத்துறை உதவிப்பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட செயல் அலுவலர் திரு. குமரேசன் உடன் சென்று கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர்.
* 26.09.2019 அன்று மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் காந்திய மாத இதழ் சார்பாக நடைபெற்ற காந்திஜியின் 150வது பிறந்த நாள் விழா சிறப்பு கல்லூரிகளுக்கிடையிலான கவிதை, பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் நமது கல்லூயின் விவேகா நுண்கலை மன்ற மாணவர்கள் கலந்து கொண்டு பரிசு பெற்றனர்.
* 23.10.2019 அன்று மாலை 6.30 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் விவேகா நுண்கலை மன்றம் சார்பாக 'கலைக்கூடல்-6' மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சிகளைக் கல்லூரி துணை முதல்வர் திரு.V.பார்த்தசாரதி தலைமை தாங்கி துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான மாதாந்திர விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.
* 01.10.2019 அன்று கல்லூரியின் கலையரங்கில் விவேகா நுண்கலை மன்றம் சார்பாக மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தின ஆண்டு சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் காந்திஜியின் பெருமையினைப் போற்றும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகளை மாணவர்களை நிகழ்த்திக் காட்டினர்.

## குருதிக்கொடை

* 06.09.2019 அன்று K.பாலகுரு (II CHE) மற்றும் நு.பாண்டீஸ்வரன் (II MATHS) ஆகியோர் மதுரை, இராஜாஜி அரசு மருத்துவமனையில் "O" Positive வகை இரத்தம் தானம் செய்தனர். 20.09.2019 அன்று V.மாதவன் (II CA) மதுரை வேலம்மாள் மருத்துவக்கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் "B" Negative வகை இரத்தம் தானம் செய்தார். 21.09.2019 அன்று மதுரை, வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் உதவிப்பேராசிரியர் திரு.A.தர்மானந்தம் இரத்த தானம் செய்தார். 01.10.2019 அன்று மதுரை, மீனாட்சி மிஷன் மருத்தவமனையில் இரத்த தானம் செய்த கல்லூரிகளுக்கு கௌரவிக்கும் விழாவில் நமது கல்லூரிக்கு இரத்ததானத்திற்குகான அங்கீகார விருது வழங்கப்பட்டது.

## ஆங்கில மொழித்திறன் பயிற்சி முகாம்

* 28.11.2019 முதல் 30.11.2019 அன்று வரை முதலாமாண்டு மாணவர்களுக்கு ஆங்கில மொழித்திறன் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. பயிற்சி முகாமில் அனைத்து முதலாமாண்டு மாணவர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும். முதலாமாண்டு மாணவர்கள் 27.11.2019 அன்று 7.00 மணிக்குள் வந்துவிடவேண்டும். அன்று இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

## கல்லூரி விடுமுறை மற்றும் கல்லூரி திறக்கும் நாள்

* 11.11.2019 முதல் துறைகளுக்கு ஏற்றாற்போல் பருவத்தேர்வு முடிந்து பருவ விடுமுறைக்காக மாணவர்கள் தத்தமது ஊர்களுக்குச் செல்கின்றனர். 15.09.2019 அன்று அனைத்து துறை மாணவர்களும் வீட்டிற்கு செல்கின்றனர். விடுமுறைக்குப் பிறகு இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் முதுகலை மாணவர்கள் 01.12.2019 அன்று இரவு 8.40 மணி வாழிவகுப்பிற்கு வந்துவிடவேண்டும். அன்று இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
* மாணவர்கள் கல்லூரிக்குத் திரும்பும் போது விடுதிக் கட்டணத்தைக் கல்லூரி அலுவலகத்தில் செலுத்தி ரசீதைக் குருகுல அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

## மாணவர்கள் செய்யவேண்டியவை

* மாணவர்கள் வீட்டிற்குச் சென்றவுடனும், வீட்டிலிருந்து கல்லூரிக்குத் திரும்பும் போதும் தாய் தந்தையரை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி ஆசிபெற்று வரவேண்டும்.
* மாணவர்கள் பொங்கல் விடுமுறையில் தங்கள் தினசரி நிகழ்வுகளைக் கட்டுரை ஏட்டில் ஒருநாளைக்கு 250 வார்த்தைகள் ஆங்கிலத்தில் எழுதி பெற்றோர் கையொப்பம் பெற்று கல்லூரிக்கு வரும்பொழுது குருகுல அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

## அக்டோபர் மற்றும் நவம்பர் – 2019 மாதத்திற்கான கட்டண விவரம்

* உணவுக் கட்டணம் நாள் ஒன்றுக்கு - ரூ.90/-

**அன்பும் நமஸ்காரமும்**

இடம்: திருவேடகம் மேற்கு
நாள்: 12.11.2019

**முனைவர் தீ.வெங்கடேசன்**
முதல்வர்